3rd April 1965] [Sri V. Ramaiah]

Government to have some time to achieve this objective. The situation is under control today and it is hoped that by the end of this month all the surplus paddy in Thanjavur will be procured and stored by the Government.

V.—GOVERNMENT MOTIONS.

(1) Approval of the Report of the Committee of Privileges on the case of 'Nava Mani' and 'Nathigam'.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir I move—

"That the recommendations made by the Committee of Privileges in its reports on the cases of 'Nava Mani' and 'Nathigam' laid on the Table of the House on the 29th March 1965 be approved."

The motion was put and carried

VI. GOVERNMENT RESOLUTION.

Constitution of the 'Kanyakumari and Avadi' Townships.

The Hon. Sri S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I move—

"That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that each of the areas specified in column (1) of the Table below which is a Health Resort or an Industrial Colony as specified in the corresponding entry in column (2) thereof, be declared to be a township—

Table.

Description of area. (1)	*Whether Health Resort or Industrial Colony.* (2)
(1) *Kanyakumari Township.*—Wards I to IV of Kanyakumari Panchayat and Ward VII of Agasteeswaram Panchayat in the Kanyakumari District.	Health Resort.
(2) *Avadi Township.*—The Koilpadagai and Vilinjambakkam Panchayats, an area of about 475 acres occupied by All India Radio, Imperial Chemical Industry, Special Armed Police, Madras Electricity System (Section and Quarters), Murugappa Polytechnic, Supply Depot and Telephone Exchange in Tirumullaivoyal Panchayat and an area of about 153 acres occupied by Tube Products, Shaw Wallace and Company, Special Armed Police and Police Quarters in Paruthipattu village forming at present a part of Avadi Town Panchayat, in Chingleput District.	Industrial Colony."

[Sri S. M. A. Majid] [3rd April 1965

Sir, Section 4 of the Madras Panchayats Act, 1958 empowers the State Government to constitute Township Committees for the administration of areas which are industrial, labour or institutional colonies or health resorts with a view to provide special administration for those areas.

It is proposed to constitute the Kanyakumari Township for the area comprising Wards I to IV of Kanyakumari Panchayat and Ward No. VII of Agasteeswaram Panchayat, in Kanyakumari District. The area is of tourist importance. It is blessed with salubrious weather throughout the year and therefore it attracts tourists including foreigners. It has also got historical, religious and political importance. Provision of amenities for the area can be better attended to by a Township Committee than by a Panchayat. It is therefore proposed to constitute a Township for the said area under the Madras Panchayat Act, 1958, treating it as a ' health resort.'

The Avadi area has of late developed into an industrial area. It therefore requires a special unit of administration for its development. It is therefore proposed to constitute a township by name ' Avadi Township ' for the area comprising the Koilpadagai and Vilinjambakkan Panchayats , an area of about 475 acres occupied by the All India Radio, Imperial Chemical Industry, Special Armed Police, M.E.S. (Section and Quarters), Murugappa Polytechnic, Supply Depot and Telephone Exchange in Tirumullaivoyal Panchayat and an area of about 153 acres occupied by Tube Products, Shaw Wallace and Company, Special Armed Police and Police Quarters in Paruthipattu village forming at present a part af Avadi Town Panchayat in Chingleput District. It is proposed to treat the area as an industrial colony for the purpose of constituting the Township.

MR. SPEAKER : The Resolution is now before the House for discussion .

"* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்தல ஸ்தாபனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். என்னுடைய கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் புதிதாக நகரக் குடியிருப்பாக மாற்றப்பட்டிருக்கிற கன்னியாகுமரிக்கும், ஆவடிக்கும் எங்களுடைய வாழ்த்துதல்களை தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய சர்க்காருடைய நீண்ட நாள் இலட்சியம் இன்றைக்கு இருக்கிற கிராமங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு. . . (குறுக்கிடு) ' ஒழிக்கப்பட்டு ' என்று நான் கூறும்போது அவை நகரங்கள் அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்ற முறையிலேதான் கூறுகிறேன்.

கனம் சபாநாயகர் : ' அபிவிருத்தி அடைந்து ' என்று சொல்லலாம்.

3rd April 1965]

திரு. கே. ஏ. மதியழகன்: இன்றைக்கு சென்னை நகரத்திலே உள்ள தபாலாபீஸ், தந்தி ஆபீஸ், பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், போக்குவரத்து சாதனங்கள் மற்றப் பெரிய நவீன வசதிகள் எல்லாவற்றையும் எடுத்து விட்டால் சென்னை நகரமே கிராமமாக மாறிவிடும். கிராமங்கள் எல்லாம் ஒழிந்து நகரங்களாக மாறவேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளின் அடிப்படையில் கன்னியாகுமரியையும், ஆவடியையும் நகரமாக மாற்றுவதற்கான தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்து அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அது சரித்திர முக்கியத்துவம், மத முக்கியத்துவம், அரசியல் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பது மட்டுமல்லாமல் பூகோள முக்கியத்துவம் கூடப் பெற்றிருக்கும் ஒரு முக்கிய இடமாகும். 2,000 மைல் நீளமும், 1,500 மைல் அகலமும் கொண்ட அகண்ட பாரதத்தில் இமயம் முதல் குமரி வரை என்பதற்குப் பதிலாக, குமரி முதல் இமயம் வரை என்று பூகோள ரீதியான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தத்துவ ரீதியாகவும், வரலாறு ரீதியாகவும் பஃறுளியாற்றையும், பாண்டிய மன்னர்களையும் நினைவுபடுத்துகிற குமரி இன்றைய தினத்தில் நகர அமைப்பாகக் கொண்டு வரப்படுவதை மிகவும் வரவேற்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு சில மீனவர்கள் குடில்களும், கடலின் பேரிரைச்சலும்தான் அங்கு இருந்தது. இன்று அது புதுக் கோலத்தோடு காட்சி அளிக்கிறது. நிர்வாக முறைக்காக மட்டும் மாற்றி விட்டால் போதாது. வெளிநாடுகளில் இருந்து பலர் இன்று அங்கு வருகிறார்கள். வெளி மாநிலங்களில் இருந்தும் பலர் வருகிறார்கள். இந்துக் கடல், வங்கக் கடல், அரபிக் கடல் மூன்றும் சந்திக்கிற பெரும் சந்திப்பு அது. அங்கு பல விடுதிகள் ஏற்பட நாம் மத்திய அரசாங்கத்திலிருந்து மான்யம் பெற வேண்டும். அங்கு மீன் கண்காட்சிசாலை, அக்வேரியம், ஒன்றை நிறுவலாம். உலகத்தில் பல இடங்களில் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் அங்குதான் இருக்கிறது. அதாவது, சந்திரன் ஒரு பக்கத்தில் எழுவதும் சூரியன் இன்னொரு பக்கத்தில் நெருப்பு பந்துபோல் மறைகின்ற காட்சியையும் அங்குதான் காண முடியும். நம் கனம் சபாநாயகர் அவர்களின் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்தும் புது மணத் தம்பதிகள் தேன் நிலா கழிக்கிறபடி தக்க ஏற்பாடுகள் செய்யும் வகையில் நல்ல பல உல்லாச விடுதிகளை அங்கு ஏற்படுத்த வேண்டும். அங்கு வருகிறவர்கள் நல்ல திடகாத்திரர்களாகவும், ஆரோக்கியமுள்ளவர்களாகவும் ஆவதற்கு வேண்டியது செய்ய இந்த சர்க்கார் முன் வரவேண்டும். கன்னியாகுமரி பழமையின் சின்னம் என்றால் ஆவடியைப் பற்றி சென்னை நகரோடு தொடர்புள்ளவன் என்ற முறையில் ஆவடிபுதுமையின் தோற்றம் என்று கூறி அதுபற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று வடக்கு, மேற்கு பகுதிகளில்தான் சென்னை நகரம் அபிவிருத்தி அடைந்து வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களின் தொகுதி இருக்கிற இடத்திற்கு என்றைக்குமே ஒரு ராசி. ஆவடியை அடுத்துள்ள இந்த பிரதேசம் சென்னையோடு தொடர்புள்ளது. ஒரு

ஒரு காலத்தில் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் எண்ணூரிலிருந்து திருவான்மையூர் வரை, கோட்டையிலிருந்து பூந்தமல்லி வரை சென்னை நகரம் வளர வேண்டும் என்று சொன்னார்கள். ஆவடி நகர்ப்புறம் ஆவதுபோல், எண்ணூர், நந்தம்பாக்கம், பல்லாவரம் போன்ற பகுதிகள் வளர்ந்து வரும் நிலையைப் பார்க்கும்போது சென்னையின் எதிர்காலத்தையொட்டி நாம் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. திருவொற்றியூர், தாம்பரம் போன்றவைகள் முனிசிபாலிட்டிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை அத்தனையும் சென்னை நகரோடு ஒருங்கிணைந்த பிரச்சினை யாகும். சென்னை நகரின் தண்ணீர் பிரச்னை பற்றி சிந்திக்க வேண்டியது நெடுநாளையப் பிரச்னை. திரு. குசேலர் அவர்கள் மேயராக இருந்தபோது கிருஷ்ணா ஆற்றை காட்டினார்கள். திரு. முனுசாமி அவர்கள் மேயராக இருந்தபோது காவேரியைக் காட்டினார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேயராக இருந்த போது நெய்வேலியை காட்டினார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆவடியைப் பொறுத்தவரையில் தனியாகவே தண்ணீர்த் திட்டம் வருகிறது. காவிரி, கிருஷ்ணாவைப் பார்க்க வேண்டியதில்லை. அது சென்னைக்கு. ஆவடிக்கு வேண்டிய தண்ணீர் திட்டம் இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மகிழ்ச்சியடைகிறேன். இப்போதுள்ள, ஆவடித் தண்ணீர் மட்டும் போதாது. இன்னும் பல தொழில்கள் வளர இருக்கிறது. திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் கடல் நீரைக் காட்டினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கணக்குப் புத்தகத்தைக் காட்டினார்கள். டெல்லி அமைச்சர்களில் சிலர் ஆகாயத்தைக் காட்டினார்கள். சிலர் பாதாளத்தையும் காட்டக் கூடும். ஆகாயத்திலிருந்துதான் மழை பெய்யவேண்டு மென்று அவர்கள் ஆகாயத்தைக் காட்டினார்கள். சென்னை நகர மக்கள் தொகை 1980, 1990-ல் 50 லட்சம் அளவிற்கு பெருகக் கூடும் என்று கணக்கிடப்படுகிறது. டெல்லிக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 100, 200 கோடி ரூபாய் அளவிற்கு நகர அபிவிருத்திக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று ஆவடிப் பகுதிக்கும், திருவான்மியூர் பகுதிக்கும், தாம்பரம், பல்லாவரம் போன்ற பகுதிகளுக்கும் குடியிருப்பு வசதிக்காக திட்டம் தீட்டப் படவேண்டும். ஊரின் பெயரை நகரம் என்று மாற்றிவிடுவதினால் மட்டும் எந்தக் காரியமும் ஆகி விடாது. ஆகவே சட்டம் நிறை வேற்றுவதோடு மட்டும் நிற்காமல் கனம் ஸ்தல அபிவிருத்தி அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை நகரின் அபிவிருத்திக்காக, டில்லிக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாய் போன்று ஒரு பெரும் தொகையை ஒதுக்கு வதற்கான திட்டம் தீட்டி நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்தீர்மானத்தை வாழ்த்தி, வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

3rd April 1965]

*டாக்டர் பா. நடராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி கிராமம் இப்போது பஞ்சாயத்தாக இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்தில் போதிய வருமானம் இல்லை. அந்த ஊரில் இருப்பவர்கள் ஏழைகள், பெரும்பாலும் மீனவர்கள்தான் இருக்கிறார்கள். உலகத்தின் பல திக்குகளில் இருந்தும் அங்கு வருகிற பிரயாணிகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் போதிய வசதி உள்ள இடமாக அதைச் செய்ய அந்தப் பஞ்சாயத்தால் முடியாது. ஆகவே, இப்போது அதை ஒரு "டவுன்ஷிப்பாக", பட்டண அந்தஸ்துடையதாக அமைப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். கனம் நண்பர் மதியழகன் அவர்கள் வாழ்த்து சொன்னார்கள், நான் நன்றியும் செலுத்திக் கொள்கிறேன். வெகு காலமாக இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேயிருந்தோம். இப்போது அரசாங்கம் எங்கள் கோரிக்கைக்கு இணங்கி, குமரி முனைக்கு பட்டண அந்தஸ்தை அளிக்க முன் வந்திருப்பது அங்குள்ள மக்களுக்கு பெரு மகிழ்ச்சியைத் தரும். கன்னியாகுமரிக்கு இப்படி ஒரு சட்டம் வராவிட்டால், அங்கு ரெயில் வரவிருப்பதால், வெகு விரைவில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கட்டடங்கள் கட்டி அதன் அழகைக் கெடுத்து விடுவார்கள். இப்போது கூட கடலோரமாக இரண்டு கோவில்கள் கட்டியிருக்கிறார்கள். ஒன்று சங்கராச்சாரியார் கோவில், இன்னொன்று சுவாமி விவேகானந்தர் கோவில். சங்கராச்சாரியார் கோவில் கடலைப் பார்த்திருக்கிறது. சுவாமி விவேகாநந்தரின் கோவில் கடலுக்கு முதுகு காட்டி இருக்கிறது. ஒன்றோடொன்று எதிர் முகமாக நின்று கடற்கரையின் அழகையே கெடுக்கும் முறையில் இருக்கிறது, திட்டமிட்டு செய்யாததினால். காந்தி மண்டபம் இருக்கிறது. பற்பல சிற்ப முறைகள் விரவிய ஒரு புது மண்டபமாக இருக்கிறது. வருகிற கட்டடங்கள் தாறுமாறாகக் கட்டப்படுமானால் கடற்கரையின் இயற்கை அழகு கெட்டுவிடும். அங்கு இப்போது குழாய்த் தண்ணீர் வசதி நாகர்கோவிலில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. திருவிதாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் நிதி அமைச்சராக இருந்த கனம் திரு. பி. எஸ். நடராஜ பிள்ளை அவர்களிடம் நாங்கள் வற்புறுத்தியதின் பேரில் இத்திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் குமரியிலுள்ள எல்லா மக்களுக்கும் போதிய அளவு கிடைக்கும் வகையில் அங்கு இன்று குடி தண்ணீர் சப்ளை இல்லை. ஆகவே, அங்கு குடி தண்ணீர் சப்ளையைப் பெருக்குவதற்கும் இம்மாதிரி ஒரு பட்டண அந்தஸ்து கொடுப்பது உதவிகரமாக இருக்கும். அடுத்தபடியாக, அங்கு யாத்ரீகர்கள், பிரயாணிகள் வந்து தங்குவதற்கு வசதியான நவீன முறையில் உள்ள ஹோட்டல்கள் இல்லை. கேப் ஹோட்டல் என்று ஒன்றிருக்கிறது. அங்கு மேஜைகள், கட்டிலுக்கு வேண்டிய பெட் ஷீட்கள், தலைகாணி உறைகள் இவை எல்லாம் இல்லை என்று அங்குள்ள மானேஜர் என்னிடம் சொன்னார்; மந்திரியிடம் சொல்லக் கூடாதா என்று கேட்டார். நான் மந்திரி அவர்களிடம் சொன்னேன். இப்போது அது பி.டப்ள்யூ.டி. மந்திரி பொறுப்பில் இருக்கிறது. அதை டூரிஸ்டு மந்திரியிடம் ஒப்படைத்தால் நன்றாகயிருக்கும்

என்று கருத்து தெரிவித்தார்கள். அந்தக் கருத்து நன்றாகத்தான் இருக்கிறது. அந்த ஹோட்டல் நல்ல முறையில், நவீன முறையில் அமைந்தால் உலகத்தின் பல பாகங்களில் இருந்தும் வந்து தங்கு கிறவர்களுக்கு வசதியாக இருக்கும். பலரும் காலையில் வந்து மாலையில் போய் விடுகிறார்கள். ஏனெனில் அங்கு தங்கியிருந்து சுற்றுப் பக்கங்களில் உள்ள காட்சிகளைக் காண்பதற்கு வேண்டிய ஹோட்டல் வசதியோ, டூரிஸ்டு வசதியோ ஏற்படவில்லை. ஒரு டூரிஸ்ட் பீரோ இல்லை. குமரியைச் சுற்றிலும் காட்சிக்குரிய பல இடங்கள் இருக்கின்றன. வட்டக் கோட்டை இருக்கிறது, மருத்துவா மலை இருக்கின்றது. இவை போன்று பல காட்சி இடங்கள் இருக்கின்றன. வட்டக்கோட்டை இருக்கிறது, அங்கு இருக்கின்றன. அவற்றையெல்லாம் கண்டு களிக்க வாய்ப் பில்லாமல் இருக்கிறது. அங்கு ஒரு பொருட்காட்சிசாலை வைக்க
10-00 a.m. வசதிகள் எல்லாம் இருக்கிறது. இதற்காக ஒரு விண்ணப்பம் வந்தது. அதைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்களிடம் வேண்டி யிருக்கிறேன். அங்கு எங்கும் காணமுடியாத மீன்கள், சங்குகள், பாசிகள் போன்ற கடற்பொருள்கள் எல்லாம் கிடைக்கின்றன. இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு 'அக்வேரியம்'—கடற்பொருள் காட்சிசாலை—ஒன்று தொடங்கலாம். இம்மாதிரி ஏற்படுத்தினால் அங்கு வருகிறவர்கள் ஒன்றிரண்டு நாட்கள் தங்கியிருந்து இவற்றையெல்லாம் பார்ப்பதற்கும், அதன் மூலமாக நல்ல முறை யில் பயன்பெறுவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். டூரிஸ்டு வருவா யும் பெருகும்.

அதோடு கன்னியாகுமரி ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று நண்பர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கனம் எ. பி. சி. வீரபாகு அவர்கள் டாக்டர் நடராஜன் அந்த இடத் தில் இருப்பதே அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததுதான் என்று மதிப்பாகச் சொன்னார்கள். அதற்கு நான் அவர்களுக்கு நன்றி யுடையவனாக இருக்கிறேன். அதிருக்க, அங்கு சரித்திர முக்கியத் துவம் என்னவென்றால், அங்கு சோழர்கள் ஆண்டிருக்கிறார்கள், பாண்டியர்கள் ஆண்டிருக்கிறார்கள், சேரர்கள் ஆண்டிருக் கிறார்கள், விஜயநகர அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். பின்னால் ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள், இப்போது நாம் ஆண்டு கொண் டிருக்கிறோம். பல அரசர்களும் இந்த இடத்தில் கூடி சமாதானம் செய்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கக்கூடிய 'முப்பந்தல்' என்ற இடத்தில் மூன்று அரசர்களும் கூடி, பந்தல் போட்டு தங்களுடைய எல்லை சம்பந்தமாக பேசி தங்கள் வேற்று மைகளை எல்லாம் போக்கி, சமரசம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் கன்னியாகுமரி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று கருதுகிறேன். எந்த வித சிக்கல்கள் ஏற்பட்டாலும், சமாதான முறையில் தீர்த்துக்கொள்ளக்கூடிய இயற்கைச் சூழ்நிலை யும் சரித்திரப் புகழும் இருக்கின்றன. இங்கேதான் மகாநாடுகள் எது கூடினாலும் வெற்றியாக முடியும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே இந்த இடத்தில் டவுன்ஷிப் கொண்டு வருவதை ஆதரித்து, மீண்டும் நன்றியையும் தெரிவித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

3rd April 1965]

Sri R. V. Swaminathan rose.

Sri M. S. Selvarajan also rose.

MR. SPEAKER: We have to finish the discussion on the Official Language Policy to-day. If the hon. Members, Sri Swaminathan and Sri Selvarajan, can limit their speeches to two on three minutes, I have no objection.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி என்பது நண்பர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி பாரத கண்டத்திலேயே ஒரு முக்கியமான பகுதியாக விளங்குகிறது. அங்கு உலகத்திலுள்ள டூரிஸ்டுகள் பலர் முக்கியமான பிரதேசம் என்று வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் போதிய சௌகரியங்கள் இல்லாமல் இருப்பதால் அங்கு வருகின்ற ஃபாரின் டூரிஸ்டுகள் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னாலும் உடனடியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதாகவும் தெரியவில்லை. பொதுவாக இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி நண்பர் டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள். கேப் ஹோட்டலைப் பற்றி சொன்னார்கள். அங்கு நவீனமான எந்த விதமான வசதியும் கிடையாது. என் இந்தக் குறைகளை எல்லாம் அரசாங்கத்தால் நிவர்த்தி செய்ய முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அங்கெல்லாம் நவீனமான வசதிகளை எல்லாம் அமைத்துக் கொடுப்பதில்லை என்ற குறையை எல்லோரும் எடுத்துச் சொல்லுகிறார்கள். மந்திரிகள் அந்த கேப் ஹோட்டலில் வந்து தங்கினால் அவர்களுக்குத் தெரியும். ஆனால் மந்திரிகள் அங்கு வந்தால் கவர்ன்மெண்ட் கட்டடங்களில் தங்கி விடுகிறார்கள். டூரிஸ்டு பங்களாக்களில் போய் தங்கினால் தான் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அங்கு இருக்கக்கூடிய கவர்ன்மெண்ட் கெஸ்ட் ஹவுசில் எல்லா வசதிகளும் இருப்பதால் மந்திரிகள் அங்கே போய் தங்கி விடுகிறார்கள், ஆகவே அவர்களுக்கு இந்த கஷ்டங்கள் தெரிவதில்லை. அதேபோன்றுதான் கன்னியாகுமரிக்குப் போகின்ற ரோடுகள் மிகவும் குறுகியதாக இருக்கிறது. இதன் மூலமாக டூரிஸ்ட்கள் வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதை அகலப்படுத்துவதற்கு யாரும் சிரத்தை எடுப்பதாகத் தெரியவில்லை. டிப்பார்ட்மென்டிலுள்ள எஞ்சினியர்களும் இதைப்பற்றி சிரத்தை எடுப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கம் தானாகச் செய்வதும் கிடையாது. எங்களைப் போன்றவர்கள் சொன்னாலும் கேட்பதில்லை. இந்தமாதிரியான வசதிகளை கவனிப்பதற்கு இந்த அசெம்பிளியிலிருந்து ஒரு கமிட்டி போட்டால் கூட நல்லது என்று கருதுகிறேன். அதே போன்றுதான் இங்குள்ள சட்டசபை அங்கத்தினர்கள் தங்குவதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டப்படுகிறது. இதில் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை என்று சொன்னாலும் இந்த விஷயத்தைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் கட்டப்படும் இந்த விடுதியில் பாத் ரூம் இல்லாத அறைகளைத்தான் இப்போதும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி கட்டுவது இந்தக் காலத்

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [3rd April 1965

திற்குப் பொருந்துமா? கிராமங்களில் போனால் கூட எல்லோரும் பாத் ரூம் இருக்கிறதா, லாவட்டரி வசதி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். இங்கு சட்டசபை மெம்பர்களுக்கு கட்டக் கூடிய ரூமில் பாத்—லாவட்டரி வசதி இல்லாமல் ரூமைக் கட்டுகிறார்கள் என்பதைப் பார்க்க மிகவும் வெட்கமாக இருக்கிறது. மற்ற ஸ்டேட்களில் நாம் போய் சட்டசபை அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய ரூம்களைப் பார்த்துவிட்டு, இங்கு நமக்கு கட்டப்படும் ரூம்களைப் பார்த்தால் அவமானமாக இருக்கிறது. இது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை மந்திரிகள் தெரிந்து கொள்வதில்லை, அவர்கள் இரண்டு நாட்கள் அங்கு வந்து தங்கிப் பார்த்தால்தான் தெரியும். இதைப்பற்றி யாரும் அவர்களிடம் சொல்லவில்லையோ என்னவோ தெரியவில்லை, ஹவுஸ் கமிட்டி இதைப்பற்றி சொல்லியிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

கனம் சபாநாயகர்: லெஜிஸ்லேச்சர் மான்யக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்தபோது கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கு இல்லை போல் இருக்கிறது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: ஆம், அந்த விவாதம் நடந்தபோது நான் ஊரில் இல்லை. இந்த முறையில் கன்னியாகுமரியில் டூரிஸ்ட்டுகள் வந்து போவதற்கான வசதிகள் போதாமல் இருக்கின்றன. வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் அங்கு வந்து தங்கிப் போகின்ற அளவுக்கு, சிறு சிறு காட்டேஜ்களை எல்லாம் கட்ட வேண்டும். அப்போதுதான் அங்கு வருகின்றவர்கள் 10, 15 நாட்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும். இதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானமும் வரும். ஆகவே இந்த வசதிகளை எல்லாம் கன்னியாகுமரியில் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் டவுன்ஷிப் தீர்மானத்தை வரவேற்கிறேன். கன்னியாகுமரி சம்பந்தமாக ஒரு சிறு விளக்கத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே கன்னியாகுமரி பஞ்சாயத்தாக இருக்கிறது. இதிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து அதாவது 1 முதல் 4 வார்டுகளை எடுக்கப் போவதாக தெரிகிறது. கன்னியாகுமரி பஞ்சாயத்தில் நான்கு வார்டுகள்தான் இருக்கின்றனவா என்பது தெரியவில்லை. சாதாரணமாக பஞ்சாயத்தை டவுன்ஷிப்புக்கு எடுத்துக்கொள்ளும் போது பஞ்சாயத்து முழுமையும் எடுப்பது நல்லது. பஞ்சாயத்திலிருந்து ஒரு பகுதியையும் விட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது அகஸ்தீஸ்வரத்திலிருந்து ஒரு வார்டையும் எடுத்துக்கொள்ளப்போவதாக தெரிகிறது. இவ்விதம் டவுன்ஷிப்பாக எடுத்துக்கொள்ளும்போது மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு ஏராளமாக மான்யத்தை பெற முடியும். கனம் டாக்டர் நடராஜன் அவர்கள் அங்கு பல வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். முக்கியமாக கடல்பாறைகள் அங்கு இருக்கின்றன, சுவாமி விவேகானந்தா போன்றவர்கள் தவம்

3rd April 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இருந்ததாக பல குறிப்புக்கள் நம்மிடம் இருக்கின்றன. ஆனால் இவ்வாறு இருக்கின்ற சிறிய சிறிய பாறைகளை எல்லாம் தொடர்பு படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் வசதிகள் இப்போது இல்லை. பெருமளவில் இல்லாவிட்டாலும் கூட, சிறிய அளவிலாவது பாலங்கள் அமைத்து குறிப்பாக யாத்ரீகர்கள் அந்த பாறைகளுக்குப் போய் வருகின்ற முறையில் நடைபாதையாக அமைகின்ற வகையில் பாலங்கள் அமைப்பது சிறந்ததாக அமையும். மேலும், திரிவேணியை எடுத்துக்கொண்டால் கங்கை, யமுனா, சரஸ்வதி போன்ற நதிகள் சந்திக்கின்ற இடத்தில் போய் பார்ப்பதற்கான வசதிகள் இருக்கின்றன. அந்த இடத்தில் தண்ணீரின் நிறங்களில் கூட வித்தியாசமிருப்பதை பார்க்க முடிகிறது. அந்த இடத்திற்கு சிறிய போட்களில் போய் குளிப்பதற்கான வசதியிருக்கிறது. கன்னியாகுமரியைப் பொறுத்தவரை மூன்று சமுத்திரங்களும் சந்திக்கின்ற இடத்தில் போவதற்கு குறைந்தது ஒரு பர்லாங் தூரத்திற்கு போகவேண்டியிருக்கும்—அந்த இடத்தில் போய் பார்க்கின்ற வகையில் போட் வசதி இருந்தால் அது நல்லதொரு காட்சியாக இருக்கும். அதே போல் அங்கு சூரிய உதயம், அஸ்தமனம் இரண்டையும் பார்ப்பதற்கு பலர் வந்து போகிறார்கள். இது பெரிய விருந்தாக இருக்கிறது. அதை நல்லமுறையில் பார்ப்பதற்கு அதாவது ஏதேனும் பாறைப் பகுதியில் நின்று பார்ப்பதற்கு வசதி செய்து கொடுக்க முடியுமா என்பதைப்பற்றியும் யோசிக்க வேண்டும். கடலுக்குள் சென்று பாறையிலிருந்து பார்ப்பது மிக சோபிதமாக இருக்கும். அதோடு அங்கு போய்ப் பார்க்கின்றவர்களுக்கு தூரதிருஷ்டி கண்ணாடி முதலியவற்றையும் கொடுத்து உதவ முடியுமா என்பதைப்பற்றியும் யோசித்துப் பார்க்கலாம்.

மேலும், கேப் ஹோட்டல், கோளா ஹோட்டல் இவைகளுக்கு வடக்கே போகின்ற ரோடிலிருந்து திரும்பி கடற்கரைக்கு ரோடு இணைப்பு இல்லாமல் இருக்கிறது. அதேபோன்றுதான் கன்னியாகுமரி நகர்ப்புறத்திற்கும் கடற்கரைக்கும் ரோடு இணைப்பு இல்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக கடற்கரையை சுற்றி வருவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. இந்த வசதி இருக்கவேண்டும். குறிப்பாக நகரங்களாக மாற்றுகின்றபோது யூரினல் வசதி இருக்கிறதா என்பதை மிக முக்கியமாகப் பார்க்கவேண்டும். பல இடங்களிலும் இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. வெளியே இருந்து வருகின்றவர்கள்--விரும்புகின்ற நேரத்தில் மல ஜலம் கழிப்பதற்கான வசதிகள் இருக்க வேண்டும். இதை முக்கியமாக கவனிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

ஆவடி, டவுன்ஷிப்பாக வருவது சந்தோஷம்தான். சாதாரணமாக டவுன்ஷிப்பாக வருவதற்கு முன் அந்த இடங்கள் பஞ்சாயத்துகளாக இருக்கின்றன. இவ்வாறு டவுன்ஷிப்பாக மாற்றும்போது பக்கத்திலுள்ள ஒன்றிரண்டு சிறிய கிராமங்களையும் இணைத்து விடுவது என்பது அரசாங்கத்தினுடைய திட்டம். ஆவடி பஞ்சாயத்தாக இருந்திருக்கும் இடங்களை எடுத்து ஆவடி டவுன்ஷிப்பாக மாற்றப்போகிறோம். காலஞ்சென்ற பெரியவர் கனம்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [3rd April 1965

சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரை ஏன் இந்த இடத்திற்குப் வைத்து கொள்ளக்கூடாது என்பதையும் அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக தொழில் பகுதிகளில் சுகாதாரம் சம்பந்தமாக நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். தொழில் பகுதிகளை எடுத்துக் கொண்டால் சில கெமிகல் ஆலைகள் இருக்கின்ற இடத்தை எடுத்துக்கொண்டால் டவுன்ஷிப்பாக எடுத்துக்கொள்ளும்போது, துண்டித்து விடுகின்ற பஞ்சாயத்துக்கு தொழிற்சாலையிலிருந்து வருகின்ற வருமானத்தை இழக்கின்ற நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக சுகாதாரக் குறைவும் ஏற்படுகிறது. அவற்றினுலெல்லாம் கூட அந்தப் பஞ்சாயத்துக்களுக்கென்று சிறு மான்ய உதவி செய்ய வசதி இல்லாமல் போய் விடுகிறது. அவற்றைப் பொறுத்த வரையில் தொழில் பகுதியை துண்டித்து டவுன்ஷிப் ஆக்கும் போது பக்கத்துப் பகுதிகளுக்குச் சட்ட பூர்வமாக என்ன செய்ய முடியும், அவற்றுக்குச் சுகாதாரக் கேடுகள் விளைய முடியாது இருக்க என்னென்ன செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டும்.

நான் குறிப்பிட்டது, ஆவடி டவுன்ஷிப் என்பதற்கு வேறு பெயர் வைப்பதிலே கஷ்டம் இருக்காது என்று எண்ணுகிறேன். திருநெல்வேலியிலேகூட நாரணம்மாள்புரம் என்ற பெயரில் இருந்த பஞ்சாயத்திலிருந்து பெரும் பகுதியைத் துண்டித்து தாழையூத்து டவுன் ஷிப் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதே முறையில்தான் இன்றைக்கு ஆவடியில் டவுன்ஷிப் ஏற்படுத்தப் போகிறோம். ஆவடியிலிருந்து துண்டித்து ஏற்படுத்தப் போகும் பஞ்சாயத்துக்குத் தனியாகப் பெயரிடுவது தவறில்லை என்று நினைக்கிறேன். ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடந்த இடத்திற்கு சத்தியமூர்த்தி அவர்களின் பெயரில் சத்தியமூர்த்திநகர் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியெல்லாம் கூட இந்த டவுன்ஷிப்பில் சேரும் என்று நினைக்கிறேன். அதை வைத்துக் கொள்ளலாம் என்று என்னுடைய ஆலோசனையைக் கூறி இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

கனம் திரு. செ. ம. அ. மஜீத்: சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தின் மீது நான்கு அங்கத்தினர்கள் நல்ல முறையில் கருத்துத் தெரிவித்து, நன்றி தெரிவித்து வரவேற்புத் தெரிவித்ததற்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த நோக்கத்திற்காக இவைகளை டவுன்ஷிப்பாக ஆக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் கருதுகிறார்களோ, இதன் மூலமாக இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களோ, அதே நோக்கத்தோடுதான் அவைகள் எல்லாவித நன்மைகளையும் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு சர்க்கார் சிந்தித்து முடிவு செய்து தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதோடு கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் குறிப்பிட்டதற்கு மேலே கன்னியாகுமரியில் விசேஷம் மீன். கடற்கரையில் மீன் அவ்வளவு ருசியாக எங்கும் இருப்பதில்லை.

3rd April 1965] *[திரு. செ. ம. அ. மஜீத்]*

மத்திய தரைக் கடல் பிரதேசத்தில்தான் மீன் ருசியாக இருக்கும் அந்த மாதிரி தலைசிறந்த அளவுக்கு ருசியாக இருப்பது கன்னியா குமரியில். கனம் அங்கத்தினர் மற்றவர்களை வசீகரிக்கும் முறையில் இதைப் பற்றிப் பிரசாரம் செய்யலாம். இன்னும் கடற்கரையில் உடல் நலத்தைப் பெருக்கும் வகையில் மூலிகைகள் இருக்கின்றன. அங்கே மூலிகை மலை இருக்கிறது. மற்ற விவரங்களை எல்லாம் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டு விட்டார்கள்.

கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் ஆவடிக்கு பெயர் மாற்றி வைப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். சர்க்கார் அதைப் பற்றி பரிசீலிக்கும், சிந்திக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

தொழில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் தனிப்பட்ட முறையில் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படாது இருக்கவேண்டும் என்று அந்த இடங்களுக்கு எல்லா அம்சங்களையும் கொடுக்க வேண்டுமென்றுதான் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசிய கனம் அங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" **That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the** House do resolve that each of the areas specified in column (1) of the table below which is a Health Resort or an Industrial **Colony as specified in the corresponding entry in column (2)** thereof, be declared to be a township " :—

TABLE.

Description of area. (1)	*Whether Health Resort or Industrial Colony.* (2)
(1) *Kanyakumari Township.*—Wards I to IV of Kanyakumari Panchayat and Ward VII of Agasteeswaram Panchayat in the Kanyakumari district.	Health Resort.
(2) *Avadi Township.*—The Koilpadagai and Vilinjambakkam Panchayats, an area of about 475 acres occupied by All India Radio, Imperial Chemical Industry, Special Armed Police, Madras Electricity System (Section and Quarters), Murugappa Polytechnic, Supply Depot and Telephone Exchange in Tirumullaivoyal Panchayat and an area of about 153 acres occupied by Tube Products, Shaw Wallace and Company, Special Armed Police and Police Quarters in Paruthipattu village forming at present a part of Avadi Town Panchayat in Chingleput district.	Industrial Colony.

The Resolution was put and carried.